பிஸ்மில்லாஹி.

இஃது,

திருவாரூர் விஜயபுரம்,

மகா-ா-ஸ்ரீ வா. ம. முஹம்மது அபுபக்கர் ராவுத்தர்,

அவர்கள் குமாரர்

ஷெய்குதாவுது விஜயக்கவி,

அவர்களால் இயற்றிய

# நவரசக்கீர்த்தனம்.

திருவாரூர் முன்சிபல்கவுன்[illegible]லரும் எஸ்டேட் டிரஸ்டியு
மான விஜயபுரம் மகா-ா-[illegible] தி. பா. வாவா ராவுத்தர்
அவர்களும், கொடிக்கால்[illegible]ாளையம் முஹப்பத்துல்
இஃவானி புட்பால்கிளப் [illegible]ர்களும், விஜயபுரம்
மகானிமூல்ஹசனு[illegible]லம் ஸங்கத்து
மெம்[illegible]களும் கேட்டுக்கொண்டபடி

---

அடியக்கமங்கலம்,

மகாவித்வானும் மதுரைச் சங்க

வித்வான்களிலொருவருமான வித்துவஜனசேகரர்

ஸ்ரீமத்

வா, அ. ஷெய்குமுஹம்மதுப் பாவலர்

அவர்களால் பார்வையிடப்பட்டு

சிலகனதனவான்களின் பொருளுதவியால்

---


திருவாரூர்,

"விக்டோரியா அச்சுக்கூடத்தில்"

பதிப்பிக்கப்பெற்றது.

[illegible]லை] 1920. [அணா 0-2-0.



Q7:417
N20
129250

பிஸ்மில்லாஹி.

# சிறப்புப்பாயிரம்.

அடியக்கமங்கலம் மகாவித்வானும்

மதுரை தமிழ்ச்சங்க வித்வான்களிலொருவருமான

வித்துவஜன சேகரர்

வா. அ. ஷெய்குமுகம்மது பாவலரவர்களாலியற்றியது.

## நேரிசையாசிரியப்பா.

---

திருவளரறுஷூம் செய்யொளி குருசும்
அருவளர் லௌகும் ஆக்கமெய் கலமும்
வானக சுவனம் வையக திமிரம்
கானமர் மதியம் கதிருடனும்
அலைகடன் மங்குலடவி களெங்கு
மலையொடு சருவமாண் புயரமரர்
மக்களும் ஜின்னுமற் றுயிரனைத்தும்

மிக்கமே லிருப்பை மேவருளாக
நிலைபெற வகுத்த நிறைபுகழிறையின்
நவமெழிற்றாதர் நமர்குல கோமான்
மாட்சியி னீரேழ்மாண் புலகெங்கு
மாட்சியு மகிமை யணிந்தருணாதர்
மெய்யக நபிமார் மேங்குலராஜர்
பொய்யகக் குபிரின் புன்னடைகளைந்த
முதுமைப் புகழார் முகம்மதுநபியின்
மதமெய்ப் புனிதவண்மையினி சுலாம்
பாகதிக்கு ரியப்பண்புயர் நெறியின்
மரபினிற்றகைமை மாலகம் பூத்தோன்
சொற்பெறு நயினார் துணையடி பெறவும்
நற்புகழ்க்கருணை நன்குற நாளும்
நவரசக் கீர்த்தனந் தொடுத்தனனால்
தவரசக் கீர்த்திச் சாற்றினன் கேட்டிசின்
திருமலி கமலத்தேன் பொழில் விஜய
புரநகர் செல்வப்புக றுதிவாழும்
ஆக்க முகம்மதபூபக்கர் சாஹிப்
ஊக்கந் தவத்திலோங்கிய மகவாய்
வாணிப முறைமை மலிநயம் பெற்று
காணியல் வாழ்க்கைக் கதித்திட நாளும்
சீருள குடும்பச் செழீ இயப்பயனாய்
பாருளர் மெய்க்கப் பண்புறு நிலையோன்
நன்னடை புனித நற்குண மேவிப்

புன்னடை போக்கிப் பொறை யருணின்றோன்
கல்வியினியலையக் கசடறகற்று
சொல்மதி ஞானந் துலங்கிடு மெழிலோன்
சித்தமுனித் தந்தே வருளாக
வித்தை யின்பத்தி விகசிதங்கொண்டோன்
இலக்கிய தொன்னூலின்புறு நன்னூல்
இலக்கண மெழிலாயிசை யொடுக்கற்றோன்
தொல்காப்பியமும் தொகைபடு நூற்கட்
பல்காப்பியமும் பயனுற வாய்ந்தோன்
நவத்திய வுலகினனி நெறிதவறு
தவத்திய லொருமைத் தன்மையிற் சிறந்தோன்
பொறுமையிற் சிறந்தோன் புந்தியிற் சிறந்தோன்
அறமதி சிறந்தோன் அகநிலை சிறந்தோன்
நவமென்மேலும் நனிகொளும் விஜயக்
கவிமென்மேலும் கதிபெற வாழ்க
தேவிதை யுள்ளம் ஷெய்கு
தாவுதென்னும் தகை நாவலனே

முற்றுப்பெற்றது.

---

திருவாரூர் திருவள்ளுவர் கல்விக்கழகத்தின் தலைவரும்,
ஜோதி சாஸ்திர விற்பன்னருமான,

பிர்ம ஸ்ரீ

V. வைத்தியநாதஸ்வாமி ஜோஸ்யரவர்களாலியற்றிய,

கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

பூமகளும் நாமகளும் பொருந்தி யகமகிழ்ந் திருக்கும்
புலவர் போற்றுங்
கோமகனு மூசுகுர்த நகரபுர மதற்கருகே
குறைவில் லாத
நேமமுறு விஜயபுர மெனுநகரி நித்தியமாய்
நிலைத்து வாழும்
நாமமுன மூஹம்மதெனு நபிமதமுற் றொளிர்பெறவே
நாட்டின் வந்தோன்

வாகுடைய ஷேய்குதாவுது வென்னும் பெயருடையோன்
மனத்தி னல்லோன்
பாகுடைய கற்கண்டோ ! மதுற்றுளியோ ! கரும்பின்ரசப்
பாகோ ! வென்ன
நாகுடைய உளமுருக மன்மகிழப் புலவரெல்லாம்
நயக்க வென்றும்
ஒகையுட நவரசகீர்த் தனையொன்றை வுலகருக்கு
உணர்த்தி னுன்ல்

---

திருவாரூர் விஜயபுரம்

## ஸ்ரீலஸ்ரீ மு. ஆ. வ. கோவிந்தசாமி ஸ்வாமியவர்களா லியற்றிய, விருத்தம்.

---

புவலோக நாட்டையொக்கும் பூவின்மீதில்
புலன்வழியே போகாத புனிதர் வாழுந்
தவஞ்சிறந்த விஜயபுரந் தன்னில் மேவுஞ்
சங்கீத சுதிலயன்கள் யாவுந் தேர்ந்து
பவர்பெற்ற விஜயகவி யென்ற பூபன்
பார்புகழப் பாவாலே புனைந்து காட்டும்
நவமணிபோற் குயிற்றிய செந்தமிழினலே
நவரசக் கீர்த்தனமெடுத்து நவின்றான் மன்னோ

முற்றிற்று.

786

# நவரசக் கீர்த்தனம்.

## காப்புக்கலி விருத்தம்.

பொன்னுலாவு நபியொலிமார் கண்மேல்
மன்னுவேதாந்த நவரசக் கீர்த்தனந்
துன்னு மிப்புவி மீதுத் தொகுத்திட
பன்னு வேத பரா பரன் காவலே.

பதம்-இராகம், செந்தாழம்பு என்ற வர்ணமெட்டு.

கண்ணிகள்.

1. அனுநமது பனுதியா னனுதினம் பணிந் தோதினேன்
குனுஉடைதரித்து குருமார்களைத்தவிர்த்து
குவலயத்தில் பவக்குளத்தில்
குதிக்குமுன்கதியருள் வல்லோனே (அனு)

2. ஹன்னுனேயான்மண்ணுகுமுன் கலந்திடுத்திருப்பூபனே
தன்னுள்தனக்கமலை தந்தானுநற்செயலை
தாமிதமின்றி பூமியில்நன்றி
ததிபெறவருள்வாயென் கோனே (அனு)

3. செஞ்சோதியைநெஞ்சாரயான் ஜெகத்தில்கண்டிடதேடுறேன்
நஞ்சானவென்நபுஸை நலமாய்ப்பிடித்துந்திசை
நடந்திடவே கடந்திடவே
நலமருள்புரிவாய் சீமானே (அனு)

4. ஆஸானுண்டாமேலஸாய்ப்போக வண்டபிண்டவருபனே
தேஸாதிபதிஎனக்கு ஆசாரவழித்துலக்கு
தேகமில்லானே ஏகவல்லோனே
தெரிசிக்கஉனே வேண்டும்யானே (அனு)

5. வித்தாகிறு கத்தாகிமெய் விளங்கிடுறப்புல்ஆலமீன்
நித்தம்விஜயக்கவி நினைப்பொன்னுடனேபுவி
நினைவகல கலைபுகல
நிதவிதமறையருள் மன்னனே (அனு)

---

(பதம் இராகம் கருணைபுரிய என்ற மெட்டு.)

கண்ணிகள்.

1. சரணம் சரணம் ஷபிவுன் நபிநல் கருணைபுரி சிங்காரா
கருணைபுரி சிங்காரா திருமறை யலங்காரா (சரணம்)

2. அருகிலிருந்துப் பெருகி வாழ்க வருளுமப்துல்லாப் பாலா
அருளுமப்துல்லாப்பாலா குருவில்லைஇனிமேலாலா (சரண)

3. பவமறத் திருதவமறை எனும் பதி தருநவநீதா
பதி தருநவநீதா அதிபதி மஹ்மூதா (சரணம்)

4. தினந் தவமருள் தருநவமணி திருமதி முகநாதா
திருமதிமுகநாதா அருமைப்பத வினோதா (சரணம்)

5. கபுமிஸாடு வரு ஷினிவிறையிடங் கலந்துவந்த குபேரா
கலந்துவந்த குபேரா நலந்தரும் வல்லதீரா (சரணம்)

6. பையல் விஜயக்கவிப் பணிந்திடப் பவமகலச் செய்யோகா
பவமகலச் செய்யோகா, தவமறை யருள்வாகா (சரணம்)

---

## (பதம் இராகம் கஹ்தாஹெருதாதில் என்ற வர்னமெட்டு)

கண்ணிகள்.

1. தாஹாநபி வாகாய்ப் பதந்தந் தாரு முஹம்மத்
தரைமீதினில்வந் தாடிடு மன்னுநபி முஹம்மத் (தாஹாநபி)

2. தேகாமதினு வாழுமிறைவேத முஹம்மத்
தென்றல்கமழ் கஸ் தூரி ஸதா வீசு முஹம்மத் (தாஹாநபி)

3. அரு மாமறைநா லாயுலகில் தோன்று முஹம்மத்
அப்துல் லாதவப்பாலா வெனைக்காத் தாரு முஹம்மத் (தாஹாநபி)

4. கலீமாவின்றிருக் காட்சிகண்ணிற் காட்டு முஹம்மத்
கதி தந்துகரை சேரவரந் தாரு முஹம்மத் (தாஹாநபி)

5. மயில் ரூபவடி வாய் றப்புஸமர்ப் பித்த முஹம்மத்
மன்ருடிஷபா அத்தருள் செஞ்ஜோதி முஹம்மத் (தாஹாநபி)

6. விவேதமறை நாடியுமைத் தேடி முஹம்மத்
விஜ யக்கவிக்கென் றுசுவனந்தாரு முஹம்மத் (தாஹாநபி)

---

## (பதம் இராகம் சீகதேஹைற என்ற வர்னமெட்டு.)

பல்லவி.

நானங்கமழ்ப் பாதந்தா வாரும் நபிநாதா நபிநாதா நபிநாதா
மோனந்ததிதோணும்படி செய்தான் மஹ்மூதா மஹ்மூதா மஹ்மூதா (நா)

அநுபல்லவி.

வானவர்களேற்றுந்தூதா, ஞானமணியான வேதா
தீனர் கட் தினம் போற்றுந் துரையே திருநாதா திருநாதா
[திருநாதா (நா)

சரணம்.

1. முத்துமயிலாயிலங்கி சுத்த ஒளிவாய்த் துலங்கி
ஹத்தன் கிருபையால் செழித்தோங்கும் நவநீதா நவநீதா நவநீதா (நா)

2. இன்பசுகந் தாருந்திரு நண்பனைக்கண் பாருங் குரு
என் னுவிற்கலி மா பெற செய்வீரெஜமானே எஜமானே எஜமானே (நா)

3. புவிதனிலே விஜயக் கவிக்கருள் செய் திவ்விய
செவிக்கோர் நன் மொழி சொல்லுக் திருத்தூதா திருத்தூதா
[திருத்தூதா (நா)

---

## பதம் இராகம் பான்க்கே ஜவானி என்ற வர்னமெட்டு.

---

பல்லவி.

தஞ்சம் வேறில்லை மனமே—உனக்கினி—நபி

அனுபல்லவி.

கஞ்சமலர்ப்பாதங் காணு விடில் தினமே (தஞ்)

சரணம்.

1. அஞ்சிப்பயந்து ரப்பைக்கூறு—இந்த
அவனியில் வந்தஸ்திதி பாரு
நெஞ்சமதிற் றுதித்து நேர்வழிசேரு (தஞ்)

2. வட்ட வெழுத்தைப் புகழ்ந்தாடு—உந்தன்
வாசியும் பிடித்துறவாடு
தட்டுமேலேரித் தங்க வாசனங் தேடு (தஞ்)

3. அரு நான்கினுட் புகுந்துக் காட்சி—தினம்
அடையாதவர்க்கொன்றில்லைமீட்சி
நருமணந பிப்பதந் தேடிக்கொள் தேர்ச்சி (தஞ்)

4. முத்திப்பெற உன் நப்ஸைப் பிடித்து—ஒரு
முத்திரையிட்டு குரு வடுத்து
சுத்தமறை தெளிந்து சூட்சம்பார் நடித்து (தஞ்)

5. கழரும் விஜயக்கவி ஞானம்—சதா
கல்பைத்துரக்கச் செய்யுமோனம்
குழரிப்போகரமலீமான் ஸ்திரப்படுந்தானம் (தஞ்)

## பதம் இராகம் நய்னூசெ மாரா என்ற வர்னமெட்டு.

பல்லவி

செழும்பதக்காக்ஷி செய்யமனமில்லையா (செழும்)

அநுபல்லவி.

சுழிமுனையான சொற்க சுடர்மாலே மக்க நகர்மேலே
வந்த இரசூலே காக்ஷி (செழும்)

சரணம்.

1. முத்தொளி நாதா முதல்வனின்றாதா
முண்டகத்தாளைத் தருங் கோமானே செல்வப் பூமானே
இல்மைப் பெறநானே காக்ஷி (செழும்)

2. சர்வசந்தோஷா சதாசுக நேசா
சாகிபேவாரும் செய்யதிரசூலே சங்கையுளமாலே
மங்குல் குடைநூலே காக்ஷி (செழும்)

3. பாவிநொந்தேனே, பதமருள் கோனே
பாஸிகைமாற்றப் பரிகாரம்செய் பட்சமுறவேவை
கவி மாவெனுமெய் காக்ஷி (செழும்)

4. அப்துல்லாபாலா அவனி பொன்னூலா
அருள்புரிந்தாளு மண்ணல்மஹ்மூதே அன்புவை இப்போதே
இன்பந்தருந்தூதே காக்ஷி (செழும்)

5. கமழருள்வீரே கலாவினில் நீரோ
கலங்கும் விஜயக் கவி ஜெயமாட கல்பிற்றுதிபாட
நல்வருளைத்தேட காக்ஷி (செழும்)

## பதம் இராகம் கயோகயோரே என்ற வர்னமெட்டு.

பல்லவி

தயாபர்ரே. சரணந் தாருந் தாஹாவென்பீரே

அனுபல்லவி.

செயாவினை செய்துப் பாவி சிந்தைநொந்து சீர்குலேந்தேன்

சரணம்.

1. ஆதிமுச்சுடரினி லதிரூபவடிவாகி
அருள்பெற்றிருந்த ஜெயமருவே
அழியாதவலி புலாமத்துடன் மீமாகி
அப்துல்லா யீன்ற திருகுருவே
பாத ஒய்யாரரே பரமசிங்காரரே பாக்கியரே முகம்
பாரும் ஸிலாக்கியரே (தயா)

2. முத்துநவரத்னமணி யான திரு சூக்ஷிப்தி
மூவ்வுலக மோனமதியே
முழுஞான மறை பெருகிவந் தயாமுஸ்தபா
முருசல் கட்கின்ப நிதியே
தத்வசாயுச்யரே தவமருள் மோட்சரே தயாளம் நீரே தர்ம
தாதாதர்க்காரும் சீரே (தயா)

3. விச்சித்ர பூபராய் விளங்கு மண் விண்ணுலகில்
வெகு மகிமையான பூவே
விஜயகவி நாவினிற் கவிமாலைத் தவராது
விரைவிலருள் தாருங்கோவே [பயகாம்பரே எனைப்
பக்ஷம் வைத்தாளும் சீரே பரமஞானப் பொற்பீரே
பாருமஹ்மூதரே. (தயா)

(பதம் இராகம் மனுஹற்வாமை என்ற வர்னமெட்டு)

கண்ணிகள்.

சதுர்வேதா ஸாயுச்ய பதந்தாரும் தினம்வாரும்
சல்லல்லா நபியே (சதுர்)

1. அதிபதிநீதா அருள் மஹ்மூதா
அன்புள நீரே எனை யாளும் மக்காவாழும்
அஹமீதான் நபியே (சதுர்)

2. மருத்வமுள்ளோரே மதியழைத்தோரே
மன்னரப்துல்லா யீன்ற பாலா திருமேலாலா
மறைகூர் நபியே . (சதுர்)

3. நேர்வழிநீரே நேசமுள்ளோரே
நெஞ்சமிரங்கி தினம் பாரும் சொர்க்கஞ் சேரும்
நெபிணர் நபியே (சதுர்)

4. புனலழைத்தோரே புகழ்விளைத்தோரே
புல்லனின் பவத்துயர் தீரும் தயைகூறும்
புவிமேல் நபியே (சதுர்)

5. கலங்கிடும் விஜயக் கவிக்கருள் வசியக்
காட்சி கண்டாட மறைதாரும் துரை வாரும்
கலிமா நபியே (சதுர்)

---

## பதம் இராகம் யாபஞ்சத்தன் பச்சாஞ

என்ற வர்னமெட்டு

கண்ணிகள்

1. திருகஞ்சப்பாதந் தந்து கரை சேரும் யா ரசூலே
பிரபஞ்சமீது செய்த பிழைதீரும் யா ரசூலே (திரு)

2. அருமாமறைப் பொற்கோவே அப்துல்லாவின் கற்பகாவே
மருமுல்லை வாசப்பூவே மக்கம் வாழும் யா ரசூலே (திரு)

3. மண்மேலுலாவியென்று மனமோர்மை மாரிநின்று
புண்ணுதும் பாவிக் கின்று புகழ்தாரும் யா ரசூலே (திரு)

4. கவலை யடைந்துயானே கமழ்ப்பாதந் தேடினேனே
பவந்தீர்த்தருள் கோமானே பயகாம்பர் யாரசூலே (திரு)

5. சன்மார்க்க சூட்சசீரே சருகாமல் காரும் பீரே
ஹன்னுனின் தீபம் நீரே கலிதீரும் யாரசூலே (திரு)

6. கடைத்தேற நாடும் விஜயக் கவிக்கோது தீட்சைஷயடைய
நடைவேதமீதுபடிய நலந்தாரும் யா ரசூலே (திரு)

---

## (பதம் இராகம் ஹமாரேசர்வரே என்ற வர்ணமெட்டு.)

கண்ணிகள்.

1. நபி நாதா மஹ்மூதா சிறந்த நாயனின் றூதா
ஷபிவுல் லா ஹபிபுல்லா நிறைந்த சரணபதம் நீதா (நபி)

2. சதாசூட்சந் தரா தேதோ மதீனு வாழும் கோமானே
பிதாவாதொன்றும் வாராமல் பகாயின் தோன்ற செய்தேனே (நபி)

3. திருஹாசிங்கிளைமீது அப்துல்லா யீன்ற பொற்பூபா
கருவாகப் புவியில் வந்தாடுந் தா ஹா நபியருள் தீபா (நபி)

4. நவநாதாந்தவழி சேரச் சகாய மாய்த் தினலோலா
தவ்ஞா னத்தினில் மேவ அபாயம் தீயசெய்மாலா (நபி)

5. சுமந்தாட ஜெபந்தேடும் விஜயக் கவிக்கருள் தீனே
எமன்நோக்கி வருமுன்னே இலாஹைற சாற்றும்பூமானே (நபி)

---

(பதம்-இராகம், வராதமாதே என்ற வர்னமெட்டு,)

பல்லவி.

தந்தாளுஞ் செந்தாமலர்ப் பூப்பதமே (தந்)

அனுபல்லவி

விந்தையாய் விளங்கி மக்கம் வாழும் தாயகா—எனை
சொந்த மென்றணைக்க யாருமில்லை நாயகா-மலர்ப்பூப்பதமே (தந்)

சரணம்.

1. துக்கசாகரத்திற் புக்கி டாமற் காருமே—பவப்
பக்கம்பாய்ந்திடாமற் ஹக்கைச்சொல்லித்தாருமே மலர்ப்பூப்பதமே (தந்)

2. ஞானந்தோண வேணுஞ்ஞாலமீது சீலரோ—பகாத்
தானந்தேடிச் செல்லக்கூறும் தர்மகோலரே மலர்ப்பூப்பதமே (தந்)

3. கலிமாவை கல்பில் காட்சித்தோணக் கற்றுத்தாருமே—மறை
மலிந்துலாவ சுவன தீட்சை என்றுங்கூறுமே—மலர்ப்பூப்பதமே (தந்)

4. பாவி சுவனமேவ சூட்ச பாக்கியந் தாருமே—சதாக்
கூவிடும் பையல் விஜயக் கவியைக்காருமே-மலர்ப்பூப்பதமே (தந்)

---

## பதம்-இராகம் மஜாதேத்தேஹெய்ன்
என்ற வர்னமெட்டு.

பல்லவி.

கதிதந்தாளத் துணையார்
கரைசேரும் நபி இரசூலே (கதி)

அநுபல்லவி.

மதினவாழ் மஹ்மூதா மறைதாரும் பொற்பாதா
ததிவந்தாளும் வேதா தரைமீது நபி-இரசூலே (கதி)

சரணம்.

1. அகமீதென் றருள்மாலா அப்துல்லாவின் பாலா
சுகந்தாரும் செங்கோலா சுவனதி நபிஇரசூலே (கதி)

2. மங்குல் குடைநடையாளா மங்கை கதிஜாவாளா
எங்கும் புகழ் நன்னூலா எனைக்காரும் நபிஇரசூலே (கதி)

3. ஒலிகட்கெல்லாமீட்சி ஒருவன்றாதா தேர்ச்சி
கலிமாவின் கண்காட்சி கல்பில்காட்டும் நபி இரசூலே (கதி)

4. விஸ்தாரப் பிரஸ்தாபா விஜயக் கவிக்கருள் தீபா
கஸ்த்தூரிக்கமழ்பூபா கலிதீரும் நபி இரசூலே (கதி)

---

## பதம்-இராகம் பியாபாபீநஜா என்ற வர்னமெட்டு

பல்லவி.

என், நெஞ்சங் கெஞ்சுங் கஞ்சுல் அன்பியா [என்]

அநுப்பல்லவி.

பஞ்சமாபாவி அஞ்சினேன் மேவி
பண்பரய்க் கண்பாரும்—கஞ்சுல் அன்பியா [என்]

சரணம்.

1. அய்மொளிவாரும் துய்தருள் தாரும்
அன்பாகக்காரும் கஞ்சுல் அன்பியா [என்]

2. நல்லருள் தாரும் வல்வினைத்தூரும்
நாதா நீர்வாரும்—கஞ்சுல் அன்பியா [என்]

3. ஞானசிங்காரா தீனலங்காரா
ஞாலத்தையாளும்—கஞ்சுல் அன்பியா [என்]

4. அம்புயப்பாதா நம்பினேன் வேதா
ஆதாரம் நீரே—கஞ்சுல் அன்பியா [என்]

5. பேருயர் மக்கா ஊரில்வாழ் சொர்க்கா
பேதைக்கருள்யா—கஞ்சுல் அன்பியா [என்]

6. பூவினில்விஜயக் கவிக்கருள்புரிய
புன்மையகற்றும்—கஞ்சுல் அன்பியா [என்]

(பதம் இராகம் ஜன்னத்மேமக்கான் என்ற மெட்டு.)

பல்லவி.

ஆலநபியே—அருள்செய் [ஆல]

அனுபல்லவி.

கோலமயில் ரூபங்கொண்ட [ஆல]

சரணம்.

1. மூலமறையாயுலக மீதில்வந்த கற்பகாவே
பாலன் முகம்பாரும் மக்கா [ஆல]

2. அருமையப்துல்லாமகவாய் ஆலமெங்கும் போற்றும்பூவே
திருப்பதந்தந் தாளுமிறை [ஆல]

3. முத்திலெழுந்தேகிமஹ்ற மூதுநபியான கோவே
சித்தம் வைத்தாளும் சொர்க்க [ஆல]

4. ஏழுவானமும்புவியும் ஏந்துங்காமுள திருவே
பாழுந்துனியாவிலருள் [ஆல]

5. அஞ்செழுத்தினுள்ளமர்ந்த அஹ்மதுமுஹம்மதுவே
வஞ்சகனையாளுமிறை [ஆல]

6. விஜயக் கவிக்கென்றுமருள் விந்தையாய் விளங்கும்சேவே
தேஜமயமான திரு [ஆல]

பதம்-இராகம், ஹாயேசையான் என்றவர்னமெட்டு.

பல்லவி

கருணைஞானி காத்தாளும் சுபுஹானி
கண்பாரு மைமெஹாலாஸானி. (கரு)

அநுபல்லவி.

திருவேதாந்தமான ஸமதானி
பெருமானே செழிக்குஞ் ஜெயிலானி
சிறந்துபதந்தாரும் சிற்றடியனைக்காரும்
சித்தமுடன் நத்தவமல் பத்தியமாய் நித்தமருள் (கரு)

சரணம்.

1. புவியாளும் ஹாஷிமிக்கிளைமாலா
பவமீளும்படிசாற்றிடும் கோலா
நவரசத்தில்நீரே நாட்டிவைத்திடும்பீரே
நற்றுணையை பெற்றிடப் போய் யற்றிட வின் புற்றிடமெய் (கரு)

2. கலிதீரும் காரணமறைபூபா
கண்பாரும் விஜயக்கவிதீபா
உலகப்புகழ்தேசா உத்தமகுணநேசா
உற்றுவெனை சுற்றவமல் கற்றுமறை முற்றிடசெய் (கரு)

---

## பதம்-இராகம், றப்கே ச்சமன் மேஓநூரே,

என்ற வர்னமெட்டு.

பல்லவி.

சஞ்சலந்திரும் யாகஞ்சஸவாய், சரணம்
ஷாகுல்ஹமீதொலி நாயகமே (சஞ்)

அநுபல்லவி.

சஞ்சிதமாற்றுந் தினந்தயவாய், சங்கை
ஷாகுல்ஹமீதொலி நாயகமே (சஞ்)

சரணம்.

1. குவலயம்புகழ்மாணிக்கப் பூறெழுந்தே—ஹஸன்
குத்தூஸிநுத் பாவி னிற்சிறந்தே—வந்த
நவரத்னசெந்தாமணிக்கொழுந்தே-நாகூர் ஷாகுல்ஹமீ (சஞ்)

2. கருணைக்கடலாய் விளங்குந்தவப் புலியே—நாளுங்
கவலை யகற்று மெனின்கலியே—புண்ய
அரசர்கட்பணியுங் குத்துபொலியே—அருமை ஷாகுல்ஹமீ (சஞ்)

3. எத்திமானவென்தாய் தந்தைமீதுதாதா—நின்று
ஈடேற்றஞ் செய்தாளவேணும்பிதா—ஞான
சித்திபெறக் காருநீரேசதா—சீதஷாகுல்ஹமீ (சஞ்)

4. நரக வேதனையை எண்ணிவாட்டமுற்று—தினம்
நவநீதஞானங்கள் மேவ சற்று—வேத
ஷரஹாநிலையாவுந்தாருங் கற்று-ஷாமெஹஷாகுல்ஹமீ (சஞ்)

5. விசுவாசமுடனென்றுங் காருமையா—பாடும்
விஜயக்கவிக்கின்பந் தாருங் கையா—மைந்தன்
கசடையறுத்துக்கண் பாருமெய்யா—கருணை ஷாகுல்ஹமீ
(சஞ்சல)

## பதம்-இராகம், ஹமாராமொரி பாரா

என்ற வர்னமெட்டு.

பல்லவி.

காருண்யப்பதந்தாருங் கற்கண்டொலியே (காரு)

அநுபல்லவி.

பார்ப்புகழ் மருதப்பட்ணம் வாழ்வே
பவமகற்றும்கோவே, புவனகற்பகாவே
பரிவுடனேயாளும் கற்கண்டொலியே (காரு)

சரணம்.

1. புவியில்மகிழும் விசுவாசா
புஷ்ப்பமழைத்தநேசா விஸ்த்தாரப்பிர காசா
புனிதப்பதம்தாருங் கற்கண்டொலியே (காரு)

2. அம்புயப்பதம் சிறந்தமாலா
அரசர்ப்புகழ்லோலா வருசைபெறுமேலா
அருள்புரிந்துக்காருங் கற்கண்டொலியே (காரு)

3. கெஞ்சிடுஹாஜத்தி க்ஷணம்சீரே
கேவலமறநீரே பாவிகட்கருள் வீரே
கெம்பீரமுளபீரே கற்கண்டொலியே (காரு)

4. விஜயக்கவிக்கருளும் நீதா
விகஜிதப்பொற்பாதா ஜெகம்புகழும்வேதா
விளங்குமெய்ஞானக் கற்கண்டொலியே (காரு)

---

## பதம்-இராகம், ஜஹான்மே ரங்கஹே

என்ற வர்ணமெட்டு.

பல்லவி.

அகக்கண் ணுளவற்புதப்புலியே அப்துல்பத்தாஹ்ராஜாக்கொலியே
மகத்வக்காக்ஷி யுறுமதியே மகிழும்சீர்ப்பாத மருள் கெதியே [அக]

அநுபல்லவி.

ஜெகத்தில் விளங்கும்சீமானே செழும்பொற் பாதகோமானே
அகப்புண் ணாற்றுபூமானே ஆரூரில்வாழும்பெருமானே [அக]

சரணம்.

1. புவன வழ்க்கையில்நொந்து புல்லன்வாடிச்சதா வெந்து
கவனமேவுமெனேவந்து கடைக்கண் பாருமருள்தந்து (அக)

2. அமல்ஹாவானசுடர்த்தோண வருள்செய்யாதுடன்பேண
எமன் நோக்கிடுமுன் யான்காண எனக்கோர் தீட்சைபுரிமோன (அக)

3. மன்றாடுமாதவக்கருவே மல்லூனேயோட்டிடுந்திருவே
நின்றாடுமேழைக்கருள் மருவே நிதானமுள்ளநற்குருவே [அக]

4. தடாகத்தாமரைபோலே தயங்கி னேன் புவிமேலே
விடாமல்கருணைவிழியாலே விஜயக்கவிக்கருள்மாலே. [அக]

---

## பதம்-இராகம், தும்பர் வார்ஞறே என்ற வர்னமெட்டு.

பல்லவி.

சேவடித் தந்தாள்வீர்—யா
ஷெய்கு அலாவுத்தீனொலி [சேவ]

அநுபல்லவி

பூவிலிலங்கிப் புகழ்மலிந்த செந்தேனே
புல்லனுக்குமதருள் கொடுதினந்தானே
நாவில்ஸதாமறை மேவிட [சேவ]

சரணம்.

1. மாயப்பேய் ஜின்னிடர்கள் மடக்கிடும் நாதா
மங்கையர்கட் துயரந் தீர்த்திடும் வேதா
நேயரெனக்கிருபானருள் [சேவ]

2. கால்கரப்பிணியடை பவரிடம்நேரே
காட்சிப்பெருக சுகப் படுத்தியப்பீரே
நூல்வழிபோற் நடந்தேறிட [சேவ]

4. அகிலமதிற்புதுமை யதிர்ந்திடத்தானே
அலிபுநிலேயிற்முத்தி யடைந்தசீமானே
மகிழுறவனுதினம் புகழ்பெற [சேவ]

5. பஞ்சஉலகில் படுபவமதைத்தீரும்
பரவசமடையுமுன் பரிவுடன்காரும்
நெஞ்சமதிற் றினங்கொஞ்சிட [சேவ]

6. பக்கவாதம்பலதும் பரக்கச்செய்வோரே
பகரும்விஜயக்கவிக் கருள்புரிவீரே
ஹக்குலெக்கினதில் சொக்கிட [சேவ]

---

## பதம்-இராகம், அம்பாள் மதுரை மீனாக்ஷி என்ற வர்னமெட்டு.

கண்ணிகள்.

1. செழும் செந்தாமரைகமழும் புலியே—எங்கள்
ஷெய்குதாவு தொலியே
விழிதிறந் தெனக் காத்திடும்பதியே
விண்மண்புகழ் மதியே [செழு]

2. சாமனேடைவிளங்கும் ஜெகக்குருவே—எங்கள்
சங்கையான மருவே
நேமநற் கருணைதரு முருவே
நேசமருள் திருவே [செழு]

3. தீராதவினைகள்தீர்ப் போரே—எங்கள்
தீபஞான மேரே
தாராய்மா ருத்துயரடைவோரே
தர்க்காத்திடும்பீரே [செழு]

4. விண்ணோர்ப்புகழ் நிறைந்தநாதா—எங்கள்
வினைதீர்த்திடு நீதா
மண்ணில்விஜ யக்கவிக் கருள்வேதா
மந்திர ஜெயபோதா. [செழு]

---

## பதம்-இராகம், ஹம்னெ உன்கேஸாம்னெ

என்ற வர்ணமெட்டு.

கண்ணிகள்.

1. பாழுந்துன்யாவாழ்வை நம்பும்பையலைக்கண்பாரைய்யா
பையலைக்கண்பாரைய்யா—ச்சிஷ்த்தி
பாத்துஷா வந்தாளையா (பாழு)

2. சூழும்பெரும்பவக் கடலில்சிக்கி சுகவழிவிட்டேனையா
வாழுமஜ்மீ சொலி சன்மார்க்க வகைபிரித்துக் காட்டையா
பாழு)

3. அவனிமீதென்னுளும்பாவி அலைந்து உருகுறேனையா
கவனமுற வென் நாவிற்கலிமா கழரவருள் தந்தாளையா
(பாழு)

4. காரணக்கண்மாமணி என் கவலையறச் செய்வீரையா
பூரணத்தீ பச்சுடர்மேல் பூத்திடக் கண் பாரய்யா (பாழு)

5. தேசம்புகழ் மெஞ்ஞானநிலையை தெரிசித்திடமுன்கூறையா
வேசிவலையில்நேசியாமல் வெற்றிபெறச்சொல்வீரய்யா(பாழு)

6. உசிதமறை என் சிரசில்செறிய உகப்பையருளென்பீரையா
விஜயக்கவிக்கின் றென்றும்யோக விதிமுறைசொல்வீரையா
(பாழு)

## பதம்-இராகம், முத்தொளிவாய்நின்

என்ற வர்ணமெட்டு.

---

கண்ணிகள்.

1. செய்யதுசுல்தான் மகுதூமொலியே
செழுங்கமலப்பாதந் தந்தருள்நிதியே
வையகம்புகழும் சுகிர்தமதியே
வழங்குந்தவராஜர்ப் பணியுங்கெதியே
அய்னுல்லெகீனை யுணர்ந்தறிந்த பொற்கனியே
அந்தமிகும் விஜயபுரத்தின் கண்மணியே
அய்யன் திருவடி எத்திடும் நவமணியே
அடியன்மிடிபவங்கள் மடிய (செய்)

2. முத்தர்ப்புகழ் ஞானமந்திர மருவே
முருஸல்நபி பேரராய்வந்த திருவே
சுத்தரடிபணிந்தேற்றிய உருவே
சுவனமதிற் கூடிக்குலவுங் குருவே
சத்தியமெனு மறைதனை யருள்வீரே
சகலவழியறிந்த சற்குணசீரே
உத்தமநிலை இனதெனப்பகர்வீரே
உலகமிரண்டில் சுகமடைய [செய்]

3. ஹக்கனருள்பெற்றோங்கிடும் பூவே
கமழுமெஞ்ஞானக் கற்பகாவே
மிக்கநலமுற்றோங்கிடும் வாழ்வே
மின்னுமொளிசுடர் தோன்றியகோவே
தக்கவஸலறிந்த தருமப்றகாசா
தவத்திலிருந்து சுகமடைந்த உல்லாசா
துக்கமகலத்திருவருள் புரிநேசா
துரிதமுடன் கலிமாசெறிய [செய்]

4. கற்றுநிலைமீதுறச் செய்மாலா
கவலையுளப்பாவியை யாள்சிலா
பற்றவிருவழி நிலைப்பகர்மேலா
பட்சமொடுக்காரும் பரமலோலா
சிர்றையுணர்ந்து சுகமடைந்த செந்தேனே
சிற்றடியன் விஜயக்கவிக்கருள் தேனே
வெற்றிப்பெருக வில்முத்தாருங் கோமானே
வெகுமகிமை விளங்கும்வருஷை. [செய்]

பதம்-இராகம், ஹபீபே ரஹ்மதுல்

என்ற வர்ணமெட்டு.

பல்லவி.

ரஹீமே, அர்ஹமுர்ரு ஹிமீனே

அநுபல்லவி.

அஹியானிர்க்கு முன் எஜமானே-ஹாய்ஹாய் (அர்)

சரணம்.

1. நஹீநொக்தலிபாகி நகரெங்கும் சமதாகி
நல்லோர்ப் பொல்லோர்ப்புகழ்வல் லோனே-ஹாய்ஹாய்(அர்)

2. ஹய்யுல்கய்யூமாகி ஹக்கு மெய்யோனாகி
காஜா றசூலை வகுத்தோனே ஹாய்ஹாய் (அர்)

3. தன்னுக்குள் தானாகி தனித்துவஹதாகி
தாத்தாய் விளங்கும் ரஹ்மானே ஹாய்ஹாய் (அர்)

4. றப்புர் றஹீமாகி ராஜ ரஜ்ஜாக்காகி
றப்புல் கரீமாய் நின்றோனே ஹாய்ஹாய் (அர்)

5. அலிபுடன்லாமாகி அன்புள்ளவனாகி
ஆலமெல்லாம் படைத்தோனே ஹாய்ஹாய் (அர்)

6. வித்தெனும் நூராலே விஜயக்கவிமேலே
வீசச்செய்யா ஹூஎன்கோனே ஹாய்ஹாய் (அர்)

# விளம்பரம்.

இப்புஸ்தகம் வேண்டியவர்கள் அடியில்கண்ட விலாசத்தாரிடம் பெற்றுக்கொள்ளலாம்:—

கனம்.

செ. இ. முகம்மதுகனி
ராவுத்தர்,

173-நெ. ஷாப் வியாபாரம்,

விஜயபுரம் திருவாரூர், ஜங்.